குடிமக்கள் ஊடக வேலைத்திட்டம்
ஊடகப் பிரிவு
மாற்றுக் கொள்கைகளுக்கான
நிலையம்
மூன்றாவது இதழ்
செப்டெம்பர் 2007

vikalpa
විකල්ප
மாற்று வழி

# குடிமக்கள் ஊடகம் - இரண்டு சம்பவங்கள்

உலகம் முழுவதும் குடிமக்கள் ஊடகம் மென்மேலும் அழுத்தம் கொடுக்கும் வகையில் சேவையாற்றி வருகிறது. எமது அயல் நாடுகளும், பாரிய அளவில் ஊடக தணிக்கைகள் மேற்கொள்ளப்படும் சீனாவும் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

**சீனா**

சீனாவின் இரண்டு மாகாணங்களில் செங்கல் தயாரிப்பதற்காக நீண்ட காலமாக சிறுவர்களை அடிமைகளாக ஈடுபடுத்தப்பட்டு வந்தமை தொடர்பாக முதலில் தெரிய வந்தது. குடிமக்கள் ஊடகம் சம்பந்தமான இணையத்தளம் மூலமேயாகும். இந்த செங்கல் வியாபாரத்துக்கு சிறுவர்களை ஈடுபடுத்தி வருகின்றமை உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகளின் ஆதரவுடனேயே என்றும் தெரியவந்துள்ளது. செங்கல் தயாரிப்பில் ஈடுபட்டு வந்த சிறுவர்களின் பெற்றோர்கள் 400 பேர் இணைந்து எழுதிய கடிதம் இணையத்தளம் ஒன்றில் வெளிவந்ததை அடுத்து சீனாவின் தேசிய ஊடகங்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கின. இந்த நடவடிக்கை தற்போது பாரிய மனித உரிமை பிரச்சினையாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் கவனத்திற்கு வந்துள்ளது.

**இந்தியா**

பகல்பூர் இந்தியாவின் பீகார் மாநிலத்தின் சிறிய நகரமாகும். மாலை ஒன்றை திருடியதாகக் கூறப்படும் நபரொருவர் அந்தப் பகுதியில் இருந்த குண்டர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மிருகத்தனமாகத் தாக்குவதும், பின்னர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் குறித்த நபரை கயிறால் கட்டி இழுத்துச் செல்வதும் குடிமக்கள் நிருபரொருவரின் கையடக்கத் தொலைபேசி கமராவில் பதிவானது. பின்னர் இது இணையத்தளமொன்றில் வெளியானது. அதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை தொடர்பாக பொது மக்கள் தரப்பில் பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க பீகார் மாநில அரசுக்கு நேரிட்டது.

இலங்கையிலும் பொதுமக்களுக்காக சேவையாற்ற குடிமக்கள் நிருபர்களுக்கு தகைமைகள் இருக்கின்றன. இன்றே செயற்படுங்கள்.

## குடிமக்கள் ஊடக இரண்டாவது ஒருநாள் செயலமர்வு தெனியாயவில்...



இலங்கையில் குடிமக்கள் ஊடக பயன்பாட்டை பிரபல்யப்படுத்தும் முகமாக எமது குடிமக்கள் ஊடக செயலமர்வின் கீழ் நடத்துவதற்கு ஏற்பர்டு செய்யப்பட்டிருக்கும் ஒருநாள் செயலமர்வின் இரண்டாவது கட்டம் 2007 செப்டெம்பர் 6 ஆம் திகதி தெனியாயவில் நடத்தப்பட்டது. தொடாவத்த தலைமையில் நடத்தப்பட்ட இந்த செயலமர்வில் தென் மாகாண சிவில் மற்றும் ஊடக அமைப்புக்களுடன் தொடர்புடைய 20 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

# குடிமக்கள் ஊடகம் மற்றும் ஒழுக்கநெறிக் கோவை




குடிமக்களுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் CNN செய்திச் சேவை வெளியிட்ட அறிவித்தல். மூலம் : இணையதளம்

*தொழில்சார் ஊடகவியலாளர்களிடம் எதிர்பார்க்கும் ஒழுக்க நெறிக்கோவை பொறுப்புகளை குடிமக்கள் ஊடக நிருபர்களிடம் எதிர்பார்க்க முடியுமா இல்லையா என்பது குறித்து தற்போது சூடான விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. செய்தி மூலங்களாக அநேக வாசகர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய எந்தவொரு ஊடகமும், பிழையின்றி, பகிரங்கமாக, நேர்மையான, பக்கசார்பின்மை ஆகிய ஒழுக்கநெறிக்கோவைகளுடன் இருக்க வேண்டும். அப்படியில்லாதவிடத்து மற்றவர்களை பாதிக்கும் வகையிலும் தமக்கு சாதகமான கருத்துக்களை நிலை நிறுத்துவதற்கும் எந்தவொருவரும் குடிமக்கள் ஊடகத்தை பயன்படுத்தும் ஆபத்து இருக்கிறதென்றும் இது தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துகளாகும். இதேபோல் வானம் இடிந்து விழுகிறதென்று ஓடும் முயல்களைப் போல் குடிமக்கள் நிருபர்கள் செயற்பட்டால் நிலைமை மோசமாகும். இதன்படி எந்தவொரு தொழில்சார் தராதரமும் குடிமக்கள் ஊடகத்துக்கு தேவையென்ற கருத்து இப்போது வெளிப்படுகின்றது. உலகில் மிகவும் அழுத்தம் கொடுக்கக் கூடிய குடிமக்கள் ஊடக இணையதளமான oh my news நிருபர்கள் பின்பற்றக் கூடிய ஒழுக்கநெறிக்கோவையொன்றை தயாரித்திருப்பது இதற்காகத்தான்.*

## OhmyNews குடிமக்கள் நிருபர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை

1. குடிமக்கள் நிருபர்கள் “சகல குடிமக்களும் நிருபர்களே” என்ற எண்ணத்துடன் செயற்பட வேண்டும், செய்தி சேகரிக்கும் போது நிருபர்களுக்குள் தாமும் ஒருவர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.
2. குடிமக்கள் நிருபர்கள் பிழையான செய்தியை பரப்புபவர்களல்ல. அவர்கள் அடிப்படையற்ற வகையில், கற்பனையில் இருந்து செய்திகளை எழுத மாட்டார்கள்.
3. குடிமக்கள் நிருபர்கள் எந்தவொருவரையும் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்தும் வகையில் மோசமான மொழி நடையை உபயோகப்படுத்த மாட்டார்கள்.
4. குடிமக்கள் நிருபர்கள் மக்களின் தனிப்பட்ட இரகசிய தன்மையை மீறும் வகையில் செய்திகளை எழுதி மற்றவர்களின் கௌரவத்துக்கு பாதகம் ஏற்படுத்த மாட்டார்கள்.
5. குடிமக்கள் நிருபர்கள் செய்தி சேகரிப்பதற்காக எப்போதும் நேர்மையான வழியில் செயற்படுவார்கள். அத்துடன் தாங்கள் செய்தியை எழுத எண்ணும் போது தகவல்களை வழங்குபவர்களிடம் தெளிவாக தெரிவிப்பார்கள்.
6. குடிமக்கள் நிருபர்கள் நேர்மையற்ற அல்லது தனிப்பட்ட லாபத்துக்கு குடிமக்கள் நிருபர்கள் என்ற பதவியை பாவிக்க மாட்டார்கள்.
7. குடிமக்கள் நிருபர்கள் தமக்கோ அல்லது தாம் சார்ந்த அமைப்பின் நன்மைக்கென எண்ணி செய்திகளை திரித்து வெளியிட மாட்டார்கள்.
8. குடிமக்கள் நிருபர்கள் தாம் எழுதி வெளியிட்ட பிழையானஅல்லது தகுதியற்ற செய்திக்காக தாமாக முன்வந்து வருத்தம் தெரிவிப்பார்கள்.

# நீர்கொழும்பு கடோல்கல கிராமத்தில் வீடமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு கிராமவாசிகள் எதிர்ப்பு



நீர்கொழும்பு, தலாதூவ கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட கடோல்கல பிரதேசத்தில் களப்புப் பகுதிக்கு அருகில் உள்ள நிலப்பரப்பில் இருக்கும் கடற்றாவரங்களை அழித்து, மண் நிரப்பி அப்பகுதியில் வீடமைப்புத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளமைக்கு எதிராக கடோல்கல கிராமவாசிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

சுனாமி ஏற்பட்டபோது கடல் நீர் கிராமத்திற்குள் புகுந்து நாசம் செய்யாமல் கடோல்கல பிரதேசவாசிகளின் உயிரையும், உடைமைகளையும் காத்த கடற்றாவரங்களை அழித்து வீடமைப்பு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளமைக்கு கிராமவாசிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 9 ஏக்கர் நிலப்பிரப்பில் பரந்து விரிந்துள்ள கடற்றாவரங்களை அழித்து அவ்விடத்தில் மண் நிரப்பி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கே கிராமவாசிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இது விகல்ப இணையதளத்துக்கு கிடைத்த குடிமக்களது குறிப்பாகும்.

இதுபற்றி கடோல்கல கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தெரிவிக்கையில், "சுனாமியின்போது கடோல்கல கிராம மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் காத்தது இக்கடற்றாவரங்களேயாகும். இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு என்ற பெயரில் இங்குள்ள கடற்றாவரங்களை அழிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரகாலமாகிறது.

இந்த வேலைத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதற்கான காரணங்களை விளக்கியும் கடந்த வருடம் நவம்பர் மாதம் நாங்கள் ஜனாதிபதிக்கும், கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சருக்கும், இயற்கை வளங்கள், சுற்றாடல் அமைச்சருக்கும் (பாட்லி சம்பிக ரணவக்க) கடிதம் அனுப்பியிருந்தோம். ஆயினும், வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக கடற்றாவரங்களை "பெக்கோ" இயந்திரங்கள் மூலம் அழிக்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

"இலங்கையில் உள்ள இருபத்திரண்டு (22) வகையான கடற்றாரங்களில் இருபது (20) வகையான கடற்றாவர வகைகள் இங்குள்ளன. "கடற்றாவரங்கள் அழிக்கப்பட்டு வீடுகள் கட்டுவதற்கு முயற்சிகள் நடப்பதால், மீண்டும் ஒரு முறை சுனாமி வந்தால் இக்கிராமத்தவர்களை யாரும் காப்பாற்ற முடியாது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், அதற்காக இன்னொரு அழிவுக்கு இடம்கொடுக்க முடியாது." என்றார்.

பிரதேசத்தில் வசிக்கும் மீனவர் ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில்,

"1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நீர்கொழும்பு தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய டென்ஸில் பெர்னாந்து அவர்களின் முயற்சியினால் அப்போது ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ளதாக இருந்த இப்பிரதேசத்தில 400 ஏக்கர் நிலம் சுத்தம் செய்யப்பட்டு மண் நிரப்பப்பட்டு குறைந்த வருமானமுடைய மக்களுக்கு காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

ஆயினும், அப்போது வகுத்த திட்டத்தின்படி அல்லாமல் தற்போது 800 ஏக்கர் வரையான பரப்பளவு காணி சுத்தம் செய்யப்பட்டு (கடற்றாவரங்கள் அழிக்கப்பட்டு) மண் நிரப்பப்பட்டு வருமானம் குறைந்த 1100 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பரம்பரையாக களப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களுக்கு கடற்றாவரங்கள் கொண்ட சிறிய ஒரு பிரதேசமே தற்போது எஞ்சியுள்ளது.

கடற்றாவரங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக மீன்கள், இறால்கள், நண்டுகளின் உற்பத்தி மிகவும் குறைந்து போயுள்ளது. அவைகளின் இனப்பெருக்கத்திற்கு கடற்றாவரங்கள் மிக அவசியமானதாகும். அதனால், களப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். "சுனாமியின்போது கிராம மக்களின் உயிரையும் சொத்துக்களையும் காத்தது இக்கடற்றாவரங்களாகும். இதுபற்றி வெளியில் உள்ள பலருக்கும் தெரியாது." என்றார்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாண சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே இக்கிராமவாசிகளின் வேண்டுகோளாகும்.

கலாநெஞ்சன் - நீர்கொழும்பு

## சிறந்த குடிமக்கள் ஊடக செய்தியென்றால்

- பிரதேசம் தொடர்பான விடயங்கள் பற்றி விவரிக்கும்.
- தெளிவாக விளங்கும் வகையில் எழுதப்பட்டிருக்கும்.
- பிரத்தியேக விடயங்களைத் தெரிவிக்கும்.
- முறையாக விடயங்களைத் தேடி பிழையின்றி எழுதப்பட்டிருக்கும்.
- தொடர்புடைய மூலங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கும்.
- ஏனைய செய்தி ஊடகங்களால் புறக்கணிக்கப்படக் கூடிய சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையிடும்.
- வாசிப்பவர்களுக்கு சக்தியாகவும் உத்வேகத்தையும் தூண்டும்.

## குடிமக்கள் ஊடக செயலமர்வு குறித்து நீங்கள் அக்கறை கொண்டுள்ளீர்களா?

குடிமக்கள் நிருபராக நீங்கள் விரும்புகின்றீர்களா? குடிமக்கள் ஊடகம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் உங்கள் நிறுவனத்தில் இருக்கின்றார்களா? இல்லாவிட்டால் உங்கள் ஊரில், சமூக வேலைத் திட்டங்களில் தொடர்பு கொள்ளும் இது போன்றவர்கள் இருக்கின்றார்களா?

அப்படியென்றால் உங்களிடம் வந்து செயலமர்வொன்றை நடத்த எங்களால் முடியும்.

மாற்றுக் குழுவுக்கு எழுதுங்கள். இல்லாவிட்டால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் ஒன்றுபட்டு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு செயலமர்வொன்றை நடத்துவோம். உங்கள் ஊரின் செய்திகள், பிரச்சினைகள் குறித்து எழுதக் கூடிய குடிமக்கள் நிருபர்கள் சிலரையாவது உருவாக்குவோம்.

மாற்று ஈ புலட்டின் தொடர்பாக உங்கள் கருத்துக்களை எழுதினால் அது எமது எதிர்கால வெளியீடுகளின் தரத்தை அதிகரிக்க உதவும். சில நிமிடங்களை செலவிட்டு இக் கேள்விகளுக்கு உங்கள் கருத்தை எழுதி எமக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

http://tinyurl.com/2yd4cy

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

குடிமக்கள் ஊடக வேலைத் திட்டம்

ஊடகப்பிரிவு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
1சீ, 28ஆம் ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : 011-2375269, 011-2375012, தொலை நகல் : 011-2375623
contributions@vikalpa.org, editor@vikalpa.org, info@vikalpa.org